**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.183/2025**

**நாள் :24.02.2026**

**ம.சா.** 2 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ரவிக்குமார் | மாவட்டம் | : | திருப்பத்தூர் |
| தந்தை / கணவர் பெயர் | : | திரு.அப்பாதுரை | வயது | : | 48 |
| ஊர் | : | கொடையாஞ்சி | தொழில் | : | கெமிக்கல் தொழில் |
| வட்டம் | : | வாணியம்பாடி | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் மனுதாரர் தரப்பு 2வது சாட்சி ஆவேன். இந்த விபத்தை நேரடியாக பார்த்தவர் என்ற முறையில் எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**1ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தை நான் நேரில் பார்த்ததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்தை நான் நேரில் பார்த்ததாக சொல்லி உள்ள நிலையில் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் இல்லை. மனுதாரர் எனக்கு தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

விபத்தில் இறந்து போனவர் பெரியபேட்டை கிராமத்தைச் சேர்ந்தவர்.எனது ஊர் கொடையாஞ்சி கிராமம். இறந்துபோனவர் பக்கத்து கிராமத்தை சேர்ந்தவர் ஆவார்.

அவரை 15 – 20 வருடமாக தெரியும். விபத்து நடந்த இடத்தில் சுமார் 5, 6 பேர் இருந்தார்கள். பெரியபேட்டையை சேர்ந்த கணேசன் என்பவரை தெரியும். அவர்தான் இருசக்கர வாகனத்தில் பின்னால் அமர்ந்து சென்ற கிருபாகரனின் உறவினர் ஆவார். அதவாது கிருபாகரனுக்கு கணேசன் பக்கத்து வீட்டுக்காரர் என்று சாட்சி கூறுகிறார். கணேசன் என்பவர் விபத்தை நேரில் பார்த்தாரா என்று எனக்கு தெரியாது. நான் விபத்து நடந்த இடத்திற்கு சென்றபோது கணேசன் அங்கு இல்லை. அதற்கு பின்னிட்டு கணேசன் எப்போது வந்தார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான்தான் அடிபட்டவரை ஆம்புலன்சில் ஏற்றி அனுப்பிவைத்தேன் என்றால் சரிதான். என்னடன் சேர்த்து மற்றவர்களும் அனுப்பிவைத்தார்கள். விபத்து நடந்த இடத்திலிருந்து ஆம்புலன்சில் வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றுச்சென்றார்கள். குற்ற வழக்கு சம்பந்தமாக வாணியம்பாடி நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில ஆஜராகி சாட்சியம் அளித்துள்ளேன். விபத்து நடந்து 2 வருடம் கழித்து நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்துள்ளேன். விபத்தில் காயம்பட்ட கிருபாகரன் கொடுத்த புகார் வாக்குமூலத்தின்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்தில் அப்பு (எ) ராஜ்குமார் இறந்தார். அப்பு (எ) ராஜ்குமார்தான் வாகனத்தை ஓட்டி வந்தார். அதற்கு பின்னால் கிருபாகரன் அமர்ந்து பயணித்தார். கிருபாகரன் கொடுத்துள்ள புகார் வாக்குமூலத்தில் அப்புவின் தம்பி சசிக்குமாருக்கு தகவல் தெரிவித்துவிட்டு அப்புவை வாணியம்பாடி அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் ஏற்றி சென்றதாக சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. நான் உண்மையிலேயே சம்பவ இடத்தில் இருந்திருந்தால் எல்லா விவரமும் தெரிந்திருக்கும் என்றும் அவ்வாறு இல்லாததால் ஆம்புலன்சில் ஏற்றி சென்றதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நாங்கள் ஆம்புலன்சுக்கு போன் செய்து வரவழைத்து அழைத்து சென்றோம். விபத்தில் சம்பந்தப்பட்ட ஆட்டோவில் அழைத்து சென்றதாக கூறும்போது ஆம்புலன்சில் அழைத்து சென்றதாக கூறுவது தவறானது என்றால் சரியல்ல. விபத்தில் இறந்தவர் எனக்கு 15 வருடம் பழக்கம் என்பதால் விபத்தில் இறந்தவரின் குடும்பத்திற்கு இழப்பீடும் பெறும்

நோக்கில் ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குற்ற வழக்கில் நான் சாட்சியமளிக்கவில்லை என்றால் சரியல்ல. என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல.

ஓம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.